O.S.No. 86/2015

பெயர் - சுப்ரமணியன்

பி.சா.1

01.11.2023.

**குறுக்கு விசாரணை:**

நான் இந்த வழக்கின் 4 ம்பிரதிவாதி விஜயா என் மனைவி. இந்த வழக்கானது 209/3A, 209/3B, 209/3C க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது . என் மனைவி வாங்கிய கிரய பத்திரம் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் நான் தான் கிரயம் செய்தேன் என்றால் சரி. இந்த சொத்து ஆதியில் நாகராஜனுக்கு சொந்தம் . நாகராஜனுக்கு 2 மனைவிகள் என்றால் ஆமாம் . முதல் மனைவி பெயர் சுந்தராம்பாள் , 2 வது மனைவி பெயர் சந்திரா என்றால் ஆமாம் . வாதிகள் 3 பேரும் முதல் மனைவியின் பெண் குழந்தைகள் என்றால் தெரியாது . 3 ஆண்குழந்தைகள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் ஆமாம் . சந்திராவுக்கும் 4 பையன், 3 பெண் குழந்தைகள் என்றால் 4 பையன் இருப்பது தெரியும் . இந்த சொத்து நாகராஜனுக்கு எப்படி கிடைத்தது என்றால் உயில் மூலம் அவருக்கு கிடைத்தது . யார் எழுதிக் கொடுத்த உயில் என்றால் நாகராஜனுடைய அப்பா நடேச படையாச்சி எழுதி வைத்த உயில் மூலம் கிடைத்தது. அந்த உயில் மூலம் நாகராஜனுக்கு கிடைத்த சொத்து என்பதால் தான் அவருடைய தனிப்பட்ட சொத்து என்று நான் கட்சியாடுகிறேன் என்றால் சரி . முதல் 2 அயிட்டங்களான 209/3A, 209/3B ஆகிய இரண்டும் நாகராஜ படையாச்சியின் மாமனார் ரெத்தின படையாச்சிக்கு சொந்தமானது என்றால் ஆமாம். அந்த ரத்தின படையாச்சி நீதிமன்றத்தில் பொது ஏலத்தில் எடுத்த சொத்துக்கள் என்றால் ஆமாம் . சாகுபடி செய்தவர்களும் விடுதலை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரி. ரத்தின படையாச்சிக்கு 2 பெண்கள் என்றால்

சரி. ஒரு மகள் சுந்தராம்பாள் மற்றொருவர் கமலாம்பாள் என்றால் சரி . ரத்தினப்படையாச்சி எப்போது இறந்தார் என்று தெரியாது . ரத்தினப்படையாச்சி இறந்த பிறகு அவருடைய இரண்டு மகள்களுக்கும் சரிபங்காக இந்த சொத்து பிரித்து விடப்பட்டது என்றால் சரி. கமலாம்பாளின் கணவர் பெயர் மகாலிங்கம் என்றால் சரி . மகாலிங்கத்திற்கு முன்பே அவருடைய மனைவி கமலாம்பாள் இறந்து விட்டார் என்றால் சரி. கமலாம்பாள் - மகாலிங்கத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் தெரியாது. நாகராஜ படையாச்சி மகாலிங்கத்திடம் ஒரு விடுதலைப்பத்திரம் அவரது பாகச் சொத்தை பொறுத்து எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரி . அந்த விடுதலைப்பத்திரம் மகாலிங்கம் தனக்காக மட்டும் எழுதி கொடுத்துள்ளார் . தன்னுடைய பெண் பிள்ளைகளுக்காக எழுதவில்லை என்றால் சரி . மகாலிங்கம் நாகராஜ்க்கு எழுதிக்கொடுத்ததை வைத்து தான் முதல் 2 அயிட்ட சொத்துக்கள் நாகராஜ்க்கு சொந்தம் என்று நான் சொல்கிறேன் என்றால் சரி . பட்டா, சிட்டாவும் நாகராஜ் பெயரில் இருந்தது . மகாலிங்கம் தனிப்பட்ட முறையில் வா .சா.ஆ.4/ செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்காததால் அவருடைய வாரிசுகளை அது கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல . நாகராஜ்க்கு உயில் மூலம் கிடைத்தாலும் அது கூட்டுக்குடும்ப சொத்து தான் என்றால் சரியல்ல . 1, 2 அயிட்ட சொத்துக்களில் வாதிக்களுக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல . மகாலிங்கத்திற்கு 6 பெண் வாரிசுகள், 1 ஆண் வாரிசு உள்ளார்கள் என்றாலும் மகாலிங்கம் தனிப்பட்ட முறையில் எழுதிவைத்த செட்டில்மெண்ட் செல்லாது என்றால் சரியல்ல . அதனடிப்படையில் நாகராஜ்க்கு உரிமை வராது என்றால் சரியல்ல . வா.சா.ஆ.4 மகாலிங்கம் மட்டும் தான் எழுதிகொடுத்துள்ளார் என்றால் ஆமாம் . 209/3C நாகராஜ்

பெயரில் பட்டா சிட்டா இருந்தது. பட்டா, சிட்டாவின் அடிப்படையில் நாகராஜ் உரிமைக் கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரயப்பத்திரம் என் மனைவி பெயரில் நான் பவர் ஏஜெண்ட் என்ற முறைமையில் எழுதிக் கொடுத்ததாகும். எனக்கு பவர் நாகராஜன் , அவருடைய மகன்கள் சாமிநாதன் , சிவராமகிருஷ்ணன், சுந்தரராஜன், மகேந்திரன், விஜயராஜ், சந்திரலேகா க/பெ. பிரபாகரன் ஆகியோர் எழுதிக் கொடுத்துள்ளார்கள் . மகேந்திரன், விஜயராஜ், சந்திரலேகா க/பெ. பிரபாகரன் ஆகியோர் நாகராஜனின் 2 ம் மனைவியின் வாரிசு என்றால் சரிதான் . தாவா சொத்துக்கள் நாகராஜனின் முதல் மனைவி சுந்தராம்பாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரி . முதல் மனைவியின் அப்பா பெயர் தான் ரத்தினப்படையாச்சி என்றால் சரி . 2 ம் தாரத்து பிள்ளைகளுக்கு இந்த சொத்தில் உரிமைக் கிடையாது என்றால் தெரியாது. சொத்துக்கள் நாகராஜ்க்கு எப்படி கிடைத்து என்று பார்த்தேனா என்றால் உயில் , அனுபவம் மற்றும் பட்டாசிட்டாவை பார்த்து வாங்கினேன். வாரிசு சான்றிதழ் நகல் கொடுத்தார் அதில் ஆண் வாரிசுகள் மட்டும் தான் காண்பிக்கப்பட்டது. அவ்வாறு வாரிசு சான்று எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல . வாதிகள் நாகராஜ்ன் மகள்கள் என்று தெரிந்து கொண்டு தான் தாவா சொத்தை நான் வாங்கினேன் என்றால் சரியல்ல . 2 வது அயிட்டமான 149/4 ல் தியாகசமுத்திரத்தில் உள்ள சொத்துக்களை நான் வாங்கவில்லை. நாகராஜ் மீது பாகப்பிரிவினை கோரி இதே நீதிமன்றத்தில் 87/2015 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரி. தாவா சொத்துக்கள் முழுவதும் நாகராஜ படையாச்சிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல . நாகராஜ படையாச்சிக்கு நிறைய சொத்துக்கள் இருந்தது

என்றால் இருந்தது. நாகராஜ படையாச்சி அந்த ஊர் பஞ்சாயத்து பிரசிடன்ட் ஆக 30 வருடங்களுக்கு மேலாக இருந்தார் என்றால் சரி. நாகராஜ படையாச்சிக்கு விவசாயம் தவிர வேறு தொழில் கிடையாது என்றால் சுவாமிமலையில் சினிமா தியேட்டர் வைத்திருந்தார். மில் வைத்திருந்தாரா என்றால் தெரியாது . நாகராஜ்க்கு தாவா சொத்துக்கள் உயில் மூலமும் செட்டில்மெண்ட் மூலமும் கிடைத்த சொத்துக்கள் என்பதால் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டசொத்துக்களாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல. 1-3 பிரதிவாதிகள் மட்டும் எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் நாகராஜ் படையாச்சி தாவா சொத்தில் தனிப்பட்ட உரிமை எதுவும் கொண்டாட முடியாது என்றால் சரியல்ல . வாதிகள் நாகராஜ படையாச்சியின் பெண் குழந்தைகளாக என்று தெரியாது . வாதிகளுக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளது என்பதை நான் கட்சியில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் வழக்கிற்கு வந்த பிறகு தான் தெரியும் . நான் எதிர்வழக்குரையில் பாகம் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல . வாதிகளுக்கு தாவா சொத்தில் 3/7 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல . வாதிகளின் பங்கை பொறுத்து நான் வாங்கிய கிரயம் செல்லாது என்றால் சரியல்ல . வாதிகள் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.